அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.33/2016
தேதி. 03.02.2016

# பத்திரிக்கைச் செய்தி

மத்திய அரசின் **'கெயில்'** நிறுவனம் கேரளா, கர்நாடகா இடையே எரிவாயு குழாய்களை பதிக்கும் திட்டத்தை செயல்படுத்தும் விதமாக தமிழகத்தின் 7 மாவட்டங்களில் நிலங்கள் கேட்கப்பட்டன. தமிழக அரசு இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ஜிதம் செய்யப்பட்ட விளைநிலங்களை விவசாயிகளுக்குத் திருப்பித் தர வேண்டும் என்றும் விளை நிலங்களுக்குப் பதிலாக சாலை ஓரங்களில் குழாய்கள் பதித்து கொள்ளலாம் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் இந்த உத்தரவுக்கு தடை விதிக்கப்பட்டதால் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் 2013ஆம் ஆண்டு மேல்முறையீடு செய்தது. இந்நிலையில் தமிழகத்தில் விளைநிலைங்கள் வழியாக **'கெயில்'** நிறுவனம் எரிவாயு குழாய் பதிப்பதற்கு அனுமதி அளித்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

பொருளாதார வளர்ச்சியை முன்னிறுத்திப் பார்க்கும்போது கெயில் நிறுவனத்தின் திட்டம் வரவேற்கத்தக்கது. அதே வேளை, அத்திட்டம் விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு செயல்படுத்தப்பட வேண்டும். **'கெயில்'** நிறுவனம் பல மாநிலங்களில் நெடுஞ்சாலைகள் வழியாக எரிவாயுக் குழாய்களை பதித்து கொண்டு செல்கிறது. ஆனால் தமிழகத்தில் மட்டும் விளைநிலங்கள் வழியாக எரிவாயுக் குழாய்களைக் கொண்டு செல்லும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் முனைப்புக் காட்டி வருகிறது. எனவே, இத்திட்டத்தைக் கைவிடவேண்டும் என்ற கோரிக்கையை பல ஆண்டுகளாக விவசாயிகள், அரசியல் தலைவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் முன்வைத்து வருகிறார்கள். தமிழக அரசும் இத்திட்டத்தைக் கைவிட வலியுறுத்தி தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

*இந்நிலையில் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு விவசாயிகளின் உணர்வுக்கு எதிராக அமைந்திருப்பது துரதிருஷ்டவசமானது. மத்திய அரசு உடனடியாக இவ்விஷயத்தில் தலையிட்டு நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் கெயில் நிறுவனத்திற்கு விவசாய நிலங்கள் வழியாக குழாய்கள் கொண்டு செல்வதற்கான அனுமதி மறுப்பை சட்ட ரீதியாக முடிவு செய்ய வேண்டும். மேலும், மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் தமிழக விவசாயிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து உடனடித் தீர்வு காண வேண்டும் என்றும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.*

***நன்றி, வணக்கம்,***
***உழைப்பவரே உயர்ந்தவர்,***
***என்றும் அன்புடன்,***



***ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,***
*தலைவர்.*